(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 2(2).]

# பாராளுமன்றம்

## 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2016 பெப்புருவரி 19 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2016 மார்ச்சு 23, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

99/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த இரண்டு வருட காலத்தினுள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பாரிய காடழிப்பு நடைபெற்று வருவதென்பதையும்;

(ii) மேற்படி காடழிப்பில் நேரடியாகவே அரசியல் தலையீடு காணப்படுகின்றது என்பதையும்;

(iii) ஆதலால் வன பாதுகாப்புத் திணைக்களம் மௌனமாயுள்ளதென்பதையும்;

(iv) மேற்படி காடழிப்பு இலங்கையின் சுற்றாடல் முறைமையிலும் அதேபோன்று கால நிலை மாற்றங்களிலும் நேரடியாகவே தாக்கத்தை எற்படுத்துகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய இரு மாகாணங்களுக்கும் உரித்தான வன ஒதுக்கங்கள் யாவை;

(ii) மேற்படி வனங்களின் பரப்பளவு ஒவ்வொரு வனத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு;

(iii) குறிப்பிட்ட வனங்கள் வன ஒதுக்கங்களாக மாற்றப்பட்ட ஆண்டு ஒவ்வொரு வனத்தின்படியும் வெவ்வேறாக யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கடந்த இரண்டு வருட காலத்தில் குறிப்பிட்ட வனப் பிரதேசங்களை தனியாக அல்லது குழுவாக வெட்டித் துப்புரவு செய்தமை தொடர்பாக கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாது;

(ii) முறைப்பாடுகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஒவ்வொரு முறைப்பாட்டின்படி வெவ்வேறாக யாவை;

(iii) பலவந்தமாக கைப்பற்றப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய இரு மாகாணங்களினதும் வன ஒதுக்கங்களுக்கு உரியதான காணிகளை மீண்டும் சுவீகரிக்க நடவடிக்கை மேற்கொள்வாரா;

(iv) ஆமெனில், அது எத்தினத்தில்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

334/ ’15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இருந்த ‘புரநெகும’ கருத்திட்டங்கள் தொடர்ந்தும் செயற்படுத்தப்படுகின்றனவா;

(ii) ஆமெனில், இக்கருத்திட்டங்கள் எந்த நிறுவனத்தினால் செயற்படுத்தப்படுகின்றன;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) காலி – இமதூவ ‘புரநெகும’ கருத்திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவு;

(ii) இந்நிதியை உபயோகித்து இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

355/ ’15

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வீடமைப்பு உள்ளிட்ட பொது வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமில் இராச்சியத்தின் அபிவிருத்தி நிதியத்தினால் நிதி உதவி வழங்கப்பட்டதா என்பதையும்;

(ii) மேற்படி உதவித் தொகையைப் பயன்படுத்தி அமுல்படுத்தப்பட்ட வீடமைப்புக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு வீடமைப்புக் கருத்திட்டத்திற்கும் செலவிடப்பட்ட பணத் தொகைகள் தனித்தனியே யாது என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தை அமுல்படுத்தும்போது அனுசரணை வழங்கிய அரச நிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் அமைய தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

357/ ’15

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அகதிகளாக வெளிநாடுகளில் பிரசாவுரிமைக்கு விண்ணப்பித்துள்ள இலங்கையர்கள், இலங்கையர்களாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறானவர்களுக்கு தூதரகங்களால் சேவைகள் வழங்கப்பட வேண்டுமென சுற்றறிக்கையொன்று உள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி சுற்றறிக்கையை நீக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், சுற்றறிக்கையை நீக்குவதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

365/ '15

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்புடன் தொடர்புடைய கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவிருந்த திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) (i) தோட்டத் தொழிலாளர்களின் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவிருந்த திகதி கழிந்து 7 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்துள்ளதென்பதையும் ;

(ii) தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை ரூபா 1,000 ஆக அமைக்குமாறு தோட்டத்தொழிலாளர்கள் கோரியுள்ளனரென்பதையும்;

(iii) தோட்டத் தொழிலாளர்களின் கூட்டு ஒப்பந்தத்தின் இருதரப்பினரும் உடன்பாட்டுக்கு வரவில்லை என்பதையும் ;

அவர் அறிவாரா?

(இ) (i) ஆமெனில், இருதரப்பினரையும் இணக்கப்பாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்காதிருப்பது ஏன்;

(ii) தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை ரூபா 1,000 ஆக அமைக்க அரசாங்கம் தலையீடு செய்யாதிருப்பது ஏன்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

396/ '15

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட உள்நாட்டு கடன் தொகை மற்றும் வருடாந்த சராசரி வட்டி வீதம் யாதென்பதையும்;

(ii) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு கடன் தொகை மற்றும் வருடாந்த சராசரி வட்டி வீதம் யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

406/ '16

கௌரவ மகிந்தானந்த அழுத்கமகே,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாவலப்பிட்டி தேர்தல் ஆளுகைப் பிரதேசத்தில், பஸ்பாகே பிரதேச செயலாளர் பிரிவினுள் காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சாட்டப்பட்டுள்ள இம்புல்பிட்டிவத்த காணியில், ஆணைக்குழுவினது அங்கீகாரத்தின் கீழ் சட்டரீதியான முறையில் ஆசிரியர் கிராமமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட ஆசிரியர் கிராமத்தை தாபித்தல் மற்றும் அதற்கான உறுதிகளை வழங்குதல் பொருத்தமாகுமென மத்திய மாகாண கல்வித் திணைக்களம், மாகாண கல்வி அமைச்சு மற்றும் மாகாண பிரதான அமைச்சு பரிந்துரை செய்துள்ளன என்பதையும்;

(iii) மேற்படி ஆசியர் கிராமத்தின் காணி பெறுனர்களான ஆசியர்கள், அதிபர்கள் உள்ளிட்ட கல்வித் துறையைச் சார்ந்த சகலரும் தற்போது வீடுகளை நிர்மாணித்து மேற்படி வீடுகளுக்கு மின்சாரம் மற்றும் நீர் வசதிகளைப் பெற்று குடியமர்ந்துள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) புதிய நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் அரசாங்கத்தின் பலம்பொருந்திய அமைச்சரவை அந்தஸ்துள்ள ஒரு அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் குறித்த ஆசிரியர் கிராமத்தை அகற்றி அக்காணிகளை மீண்டும் சுவீகரித்துக்கொள்ள வேண்டுமென மேற்கொண்ட கோரிக்கையின் பிரகாரம் காணி பெறுனர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

411/ '16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சிறு இறப்பர் காணித் துண்டு உரிமையாளர்களை 1/2 ஏக்கர் காணி உரிமையாளர்களாகக் கருதி எண்ணிக்கை ரீதியில் கணிப்பிடுகையில், இவர்களுக்கு தற்போது கிடைக்கும் வருமானம் ஒரு கிலோவுக்கு சுமார் ரூபா 225/- ஆகும் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கடந்த அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட சலுகை விலையான ரூபா 300/- கிடைக்காமையால், சராசரியாக காணித் துண்டு உரிமையாளர் ஒருவருக்கு நாளொன்றுக்கு, ஒரு கிலோவுக்கு சுமார் ரூபா 75/- நட்டம் ஏற்படுகின்றதென்பதையும்;

(ii) ஒரு கிலோ இறப்பருக்கு குறைந்தபட்ச விலையாக ரூபா 300/- கிடைக்காவிடின், குறைந்த வருமானம் பெறும் இக் குடும்பங்களின் நிலை மேலும் வீழ்ச்சியடையும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) தற்போதைய அரசாங்கம் ஒரு கிலோ இறப்பருக்கு ரூபா 350/- உத்தரவாத விலை வழங்குவதாக வழங்கிய உறுதிமொழிக்கு ஏற்ப, குறிப்பிட்ட உத்தரவாத விலையை நடைமுறைப்படுத்தாமல் இருப்பது ஏன்;

(ii) இதற்கான வேறொரு நிவாரண ரீதியிலான நடவடிக்கையை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) மேலே ஆ (ii) இற்கு ஏற்ப, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் நிலை மேலும் வீழ்ச்சியடைகின்றபோது, மக்களின் வருமான மட்டத்தை அதிகரிப்பது தொடர்பில் பிரதம அமைச்சரால் மேற்கொள்ளப்படுகின்ற கூற்றுக்கு எதிர்மாறானது நிகழ்ந்துள்ளதென்பதையும், இது பல இலட்சம் குடும்பங்கள் மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துமென்பதையும், இது தொடர்பில் அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து கூற்றொன்றை வெளியிடுவாரா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

414/ '16

கௌரவ பிரசன்ன ரணதுங்க,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.01.08 ஆந் திகதி தொடக்கம் 2015.12.31 ஆந் திகதி வரை முன்னாள் மற்றும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, மாகாண சபை உறுப்பினர்களுக்கு, பிரதேச சபை, நகர சபை மற்றும் மாநகர சபை உறுப்பினர்களுக்கு எதிராக பொலிசு நிதிசார் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு (FCID) கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு;

(ii) மேற்படி (i) இன் பிரகாரம் குற்றச்சாட்டுக்கு இலக்காகியுள்ள முன்னாள் மற்றும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை, நகர சபை மற்றும் மாநகர சபை உறுப்பினர்களின் பெயர்களை சபையில் சமர்ப்பிப்பாரா;

(iii) பொலிசு நிதிசார் குற்றப் புலனாய்வுப் பிரிவினால் புலனாய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள முன்னாள் மற்றும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை, நகர சபை மற்றும் மாநகர சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு;

(iv) இப்புலனாய்வுகளின் முன்னேற்றம் தனத்தனியாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

102/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நில்வலா கங்கையினதும் ஜின் கங்கையினதும் நீரை பாரிய அம்பாந்தோட்டை அபிவிருத்தி வலயத்துக்குக் கொண்டு செல்வதற்கான கருத்திட்டத்தின் பிரகாரம் அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குக் கொண்டு செல்வதற்காக எதிர்பார்க்கப்படும் நீரின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) அக்கருத்திட்டத்தின் திட்டவரைவை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) அக்கருத்திட்டத்தின் காரணமாக காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பாக சுற்றாடல் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்வறிக்கையை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) அக்கருத்திட்டத்தின் மூலம் நில்வலா கங்கையில் உவர் நீர் கலக்கும் ஆபத்தை கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பாரிய அம்பாந்தோட்டை நீர் கருத்திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள செலவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிதியைப் பெற்றுக்கொள்ளும் மூலங்கள் யாவையென்பதையும்;

(iii) அக்கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகளுக்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், கேள்விப்பத்திரங்களை முன்வைத்துள்ள கம்பனிகளின் பெயர்கள், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் வெளிநாட்டுக் கம்பனிகளாயின் அவற்றின் பெயர்கள், அவை உரித்தாகின்ற நாடுகள் யாவையென்பதையும்;

(v) முன்வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரங்களின் பெறுமதி யாதென்பதையும்;

(vi) கேள்விப்பத்திரம் அளிக்கப்பட்டுள்ள கம்பனியும் அதற்கான காரணங்களும் யாவையென்பதையும்;

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) பாரிய அம்பாந்தோட்டைக் கருத்திட்டத்தின் காரணமாக வீடுகள் உள்ளிட்ட சொத்துக்களை இழப்பவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

358/ '15

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நகரப் பிரதேசங்களில் புதிய வீடமைப்புக் கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய வீடுகள் தனி வீடுகளாக நிர்மாணிக்கப்படுமா அல்லது மாடிவீடுகளாக ( Flats ) நிர்மாணிக்கப்படுமா என்பதையும்;

(iii) மாடி வீடுகளாக அமையும் பட்சத்தில், ஒரு கட்டடத்தில் நிர்மாணிக்கப்படும் மாடிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) ஒரு மாடியில் இருக்கக்கூடிய வீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த காலப்பகுதியில் கொழும்பு 02, கொம்பெனித்தெரு பிரதேசத்தில் வீடுகளிலிருந்து குடியிருப்பாளர்கள் பலவந்தமாக அகற்றப்பட்டார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) வீடுகள் வழங்கப்பட்டுள்ளவர்கள் தொர்பான விபரத்தை பெற்றுத்தர முடியுமா என்பதையும்;

(iv) அவ்வாறு வழங்கப்பட்டுள்ள வீடுகளின் சதுர அடி அளவு மற்றும் அவ்வீடுகளின் வசதிகள் தொடர்பாக திருப்தியடைகின்றாரா என்பதையும்

(v) மேலும் வீடு பெறுனர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அது பற்றிய விபரங்களை பெற்றுக்கொடுப்பரா என்பதையும்;

(vii) இன்றேல், நட்டஈடு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

372/ '15

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள தென்னங்கள்ளு கொள்வனவு செய்யும் வடிசாலை கம்பனிகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி வடிசாலைக் கம்பனிகளுக்கு தென்னங்கள்ளு வழங்குவதற்கென மதுவரித் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வழங்குனர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் ஒவ்வொரு வடிசாலை கம்பனியின் தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) கள்ளு உற்பத்தியாளர்களுக்கு உரிமப் பத்திரம் வழங்கப்பட்டுள்ள தென்னை மரங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு உற்பத்தியாளரின்படி தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) களுத்துறை மாவட்டத்தில் வினாகிரி உற்பத்தி உரிமப்பத்திரம் பெற்றுள்ளவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(v) மதுவரித் திணைக்களத்தின்படி ஒரு தென்னை மரத்திலிருந்து நாளொன்றில் சராசரியாக உற்பத்தி செய்யக்கூடிய கள்ளின் அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

397/ '15

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தமது இந்திய விஜயத்தின் போது இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் ஒரு பாலத்தை நிர்மாணிப்பது தொடர்பில் பேச்சுவார்த்தை எதுவும் இடம்பெறவில்லை எனவும், அத்தகைய ஒரு பேச்சுவார்த்தை இடம்பெறுமாயின் பாராளுமன்றத்தை விழிப்புணர்வூட்டுவதாகவும் பிரதம அமைச்சர் பாராளுமன்றத்தில் கூறினார் என்பதையும்;

(ii) இலங்கையின் பிரதம அமைச்சரது இந்திய விஜயத்தின்போது அவர் இந்த பாலம் குறித்து இந்திய பிரதமருடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதாக இந்திய வீதிப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் நிதின் கட்காரி 2015.12.16ஆந் திகதி இந்திய லோக் சபாவில் அறிவித்துள்ளார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாலம் தொடர்பான உண்மைக்குப் புறம்பான கூற்றை விடுத்திருப்பவர் இலங்கையின் பிரதம அமைச்சரா அல்லது இந்திய நெடுஞ்சாலைகள் அமைச்சரா;

(ii) இந்தியா இந்தப் பாலத்தை இலங்கையின் உடன்பாடின்றி நிர்மாணிக்கின்றதா;

(iii) இத்தகைய ஒரு பலவந்தமான ஒரு செயற்பாட்டின் முன்னே இலங்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கும் நடவடிக்கைகள் யாவை;

(iv) இந்த பாலத்தின் மூலம் தேசிய பாதுகாப்புக்கு, பொருளாதாரத்திற்கு, தொழில்நிலைக்கு மற்றும் தொற்றுநோய் கட்டுப்பாட்டுக்கு ஏற்படும் தாக்கம் குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளதா;

(v) மேற்குறித்த ஆய்வு அறிக்கைகள் பாராளுமன்றத்துக்கு முன்வைக்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2016 மார்ச்சு 24, வியாழக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

103/ '15

கௌரவ புத்திக பத்திரண,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010.01.01 ஆம் திகதி தொடக்கம் 2014.12.31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் கனடாவிலும் அமெரிக்காவிலும் மரணித்த இலங்கைப் பிரசைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு நாட்டின்படி தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) இவர்களது பெயர், வயது, இலங்கையில் வசித்த முகவரி மற்றும் மேற்படி நாடுகளில் புரிந்த தொழில் யாவையென்பதையும்;

(iii) இந்த ஆட்களின் மரணங்களுக்கான அண்மித்த காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) இவர்கள் சார்பாக அரசாங்கம் வழங்கியுள்ள நிவாரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010.01.01 ஆம் திகதி தொடக்கம் 2014.12.31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் கனடாவிலும் அமெரிக்காவிலும் முழுமையாக அல்லது பகுதியளவில் அங்கவீன நிலைமைக்கு உள்ளாகிய இலங்கைப் பிரசைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு நாட்டின் பிரகாரம் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) இவர்களது பெயர், வயது, இலங்கையில் வசித்த முகவரி மற்றும் மேற்படி நாடுகளில் மேற்கொண்ட தொழில் யாவையென்பதையும்;

(iii) இவர்கள் அங்கவீனமடைந்ததற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) இவர்கள் சார்பாக அரசாங்கம் வழங்கியுள்ள நிவாரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

335/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி – இமதூவ நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் இமதூவ சந்தியை விஸ்தரிப்பதற்காக சுவீகரிக்கப்பட்டுள்ள காணியின் பரப்பளவு எவ்வளவு;

(ii) இமதூவ சந்தியை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ள உத்தேச மாற்று வீதியின் நீளம் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

359/ '15

கௌரவ எஸ். எம் மரிக்கார்,— அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் தேசிய வருமானத்துக்கு, ஏற்றுமதி வருமானத்தின் மூலம் கிடைக்கும் நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) இத் தொகை தேசிய வருமானத்தின் எத்தனை சதவீதமென்பதையும்;

(iii) ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்கச் செய்வதற்கான ஏதேனும் இலக்கு உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்த இலக்கு யாதென்பதையும்;

(v) மேற்படி இலக்கை அடைவதற்கு எதிர்பார்க்கும் விதமும் கால எல்லையும் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

373/ '15

கௌரவ ( டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— கல்விஅமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கென பாடசாலை சீருடை துணிக் கொள்வனவின் பொருட்டு அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அது, எவ்வளவு துணி கொள்வனவுக்காக என்பதையும்;

(iii) அதற்கென ஒதுக்க உத்தேசித்துள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(iv) மேற்படி அமைச்சரவைப் பத்திரம் அங்கீகரிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(v) அதன்படி பகிரங்க விலை கோரல் இடம்பெற்றதா என்பதையும்;

(vi) ஆமெனில், விலைகளைச் சமர்ப்பித்த வழங்குனர்கள் மற்றும் இவர்களின் விலைகள் தனித்தனியாக யாதென்பதையும்;

(vii) கல்வி அமைச்சு, 2016 ஆம் ஆண்டுக்கென சீருடை துணி கொள்வனவு செய்த வழங்குனர்கள் யாவர் என்பதையும்;

(viii) கொள்வனவு செய்யப்பட்ட துணியின் அளவு யாதென்பதையும், அதற்கென செலுத்தப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) துணி கொள்வனவுக்குப் பதிலாக பாடசாலை சீருடை வவுச்சர் ஒன்றை வழங்க முடிவுசெய்யப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) கல்வி அமைச்சர் பாடசாலை சீருடை துணியில் 25% முறைகேடாக பயன்படுத்தப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் ஆய்வு அறிக்கையை சபாபீடத்தில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

390/ '15

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சவுதி அரேபிய அபிவிருத்தி நிதியத்தால், அக்கரைப்பற்று, நுரைச்சோலை கிராமத்தில் வீடமைப்புக் கருத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டது என்பதையும்;

(ii) மேற்படி வீடமைப்புக் கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகளின் இறுதிக் கட்டத்தின் போது பயனாளிகளுக்கு மத்தியில் பகிர்ந்தளிக்க முன்னர் உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட 178/2008 ஆம் இலக்க வழக்கின் கட்டளையின் பிரகாரம் வீடுகளை பகிர்ந்தளித்தல் இடைநிறுத்தப்பட்டதென்பதையும்;

(iii) 2009.12.02 ஆம் திகதி வெளியிடப்பட்ட மேற்படி வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டு ஐந்து வருடங்கள் கடந்துள்ள போதிலும், அதற்கமைய வீடுகள் பகிர்ந்தளிக்கப்படாமை காரணமாக மேற்படி ஆதனங்கள் அனைத்தும் மனித பயன்பாட்டுக்கு பொருத்தமற்றவாறு சேதமடைந்துள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேலே அ(iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வழக்குத் தீர்ப்புக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தாமதிக்காது அறிவுரை வழங்குவாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

398/ ’15

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டின் உண்மையான அல்லது, மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி எவ்வளவென்பதையும்;

(ii) 2016 ஆம் ஆண்டில் எதிர்வுகூறப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி எவ்வளவென்பதையும்;

(iii) வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்படுகின்ற பாராம்பரிய முறையின் கீழ், 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை வரவு செலவு திட்டத்தில் கல்விக்கும் சுகாதாரத்திற்கும் ஒதுக்கப்பட்ட பணத் தொகை மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) 2016 வரவு செலவு திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை சமர்ப்பிக்கின்ற நவீன முறையின் கீழ் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை வரவு செலவுத்திட்டத்தில் கல்விக்கும் சுகாதாரத்திற்கும் ஒதுக்கப்பட்ட பணத் தொகை மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

412/ ’16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் தேயிலையுடன் பெற்றோலியத்தை பண்டமாற்றுச் செய்வதற்காக ஈரானுடன் உடன்படிக்கையொன்றை செய்துகொள்ள முடியாதா என்பதையும்;

(ii) இவ்வாறே, இறப்பர் தொடர்பிலும் இதேபோன்ற பண்டமாற்று சந்தை நிலைமையை ஏற்படுத்திக்கொள்ள முடியுமா என்பதைப் பற்றி ஆராய்ந்துள்ளாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

104/ ’15

கௌரவ புத்திக பத்திறண,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010.01.01 ஆம் திகதி தொடக்கம் 2014.12.31 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் அவுஸ்திரேலியாவிலும் யப்பானிலும் மரணித்த இலங்கைப் பிரசைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு நாட்டின்படி தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) இவர்களது பெயர், வயது, இலங்கையில் வசித்த முகவரி மற்றும் மேற்படி நாடுகளில் புரிந்த தொழில் யாவையென்பதையும்;

(iii) இந்த ஆட்களின் மரணங்களுக்கான அண்மித்த காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) இவர்கள் சார்பாக அரசாங்கம் வழங்கியுள்ள நிவாரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010.01.01 ஆம் திகதி தொடக்கம் 2014.12.31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அவுஸ்திரேலியாவிலும் யப்பானிலும் முழுமையாக அல்லது பகுதியளவில் அங்கவீன நிலைமைக்கு உள்ளாகிய இலங்கைப் பிரசைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு நாட்டின் பிரகாரம் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) இவர்களது பெயர், வயது, இலங்கையில் வசித்த முகவரி மற்றும் மேற்படி நாடுகளில் மேற்கொண்ட தொழில் யாவையென்பதையும்;

(iii) இவர்கள் அங்கவீனமடைந்ததற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) இவர்கள் சார்பாக அரசாங்கம் வழங்கியுள்ள நிவாரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

339/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1 )

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் மணல் அகழ்வு மற்றும் ஏற்றிச்செல்லல் தடை செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) தற்போது பொலன்னறுவை மாவட்டத்தில் மணல் அகழ்வு மற்றும் ஏற்றிச் செல்லல் எவ்விதத்திலும் இடம்பெறுவதில்லையா என்பதையும்;

(iii) மேற்படி மாவட்டத்தில் மணல் அகழ்வு மற்றும் ஏற்றிச் செல்லல் தனியார் நிறுவனமொன்றுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) GSMB Technical Services (Pvt) Ltd. கம்பனிக்கும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கும் இடையே உள்ள தொடர்பு யாது என்பதையும்;

(ii) மேற்படி கம்பனி அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி கம்பனி மேற்கொள்கின்ற வேறு சேவைகள் யாவை என்பதையும்;

(iv) பொலன்னறுவை மாவட்டத்தில் மணல் அகழ்வு மற்றும் ஏற்றிச் செல்லலுக்கு இந்தக் கம்பனி தெரிவு செய்யப்பட்டிருப்பது அங்கீகரிக்கப்பட்ட கேள்விப்பத்திர நடைமுறைக்கு அமையவா என்பதையும்;

(v) ஆமெனில், அது எத்திகதி முதல் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கம்பனி மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுடன் அல்லது புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்துடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் நிபந்தனைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கம்பனியிலிருந்து அரசாங்கத்திற்குக் கிடைத்த குத்தகை வருமானம் யாது என்பதையும்;

(iv) மேற்படி கம்பனிக்கு பொலன்னறுவை மாவட்டத்தில் மணல் அகழ்வு மற்றும் ஏற்றிச் செல்லல் தொடர்பாக தனியுரிமை அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதன் மூலம் சுற்றாடல் அழிவு இடம்பெறாதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

360/ '15

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2015 இல் பாடசாலை மாணவர்களுக்கு பாதணிகளை வழங்குவதற்காக கேள்விப் பத்திரம் கோரப்பட்டதா;

(ii) இதற்காக விண்ணப்பித்த கம்பனிகள் யாவை;

(iii) மேற்படி கம்பனிகள் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளனவா;

(iv) கம்பனிகள் முன்வைத்த விலைகள் வெவ்வேறாக யாது;

(v) கடந்த வருடங்களில் பல கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட கேள்விப் பத்திரம், இத்தடவை DSI கம்பனிக்கு மாத்திரம் வழங்கப்பட்டுள்ளதா;

(vi) அதிகூடிய விலைகள் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பத்திரத்தை முன்வைத்தது DSI கம்பனியா;

(vii) DSI கேள்விப்பத்திரத்துக்கான அமைச்சரவை அங்கீகாரம், மிகக் குறைந்த விலையெனக் குறிப்பிடப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்டதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த வருடங்களில் மேற்படி கேள்விப் பத்திரம் பல கம்பனிகளுக்கு வழங்கப்பட்டதா;

(ii) ஆமெனில், ஏன்;

(iii) கடந்த வருடத்தில் DSI கம்பனி பெற்றுக்கொண்ட 04 இலட்சம் சோடி பாதணிகளையும் அக்கம்பனியே வழங்கியிருந்ததா;

(iv) இல்லையெனில், பிறிதொரு நிறுவனத்தினால் 50,000 சோடி பாதணிகள் வழங்கப்பட்டனவா;

(v) இத்தகைய ஒரு நிலைமையில், இக்கேள்விப் பத்திரத்தை தனித்து ஒரு கம்பனிக்கு வழங்கியமைக்கான காரணம் யாது;

(vi) DSI கம்பனிக்கு கேள்விப் பத்திரம் வழங்கப்பட்டமையின் ஊடாக நிதி மோசடி அல்லது அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்படவில்லையென உறுதிப்படுத்த முடியுமா;

(vii) மோசடி இடம்பெற்றுள்ளதாக தெரியவரும் பட்சத்தில், தவறாளிகளைத் தண்டிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

374/ '15

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) அனுராதபுரம், வவுனியா ஊடாக யாழ்ப்பாணம் வரை நிர்மாணிப்பதற்கு ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட வடக்கு அதிவேக நெடுஞ்சாலையை, பின்னர் பொலனறுவை, திருகோணமலை, முல்லைத்தீவு ஊடாக யாழ்ப்பாணம் வரை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) வவுனியா ஊடாக திட்டமிடப்பட்டிருந்த வீதியின் நீளம், எதிர்பார்க்கப்பட்ட மொத்த செலவு மற்றும் காணி சுவீகரிப்பின்போது வழங்குவதற்கு எதிர்பாட்கப்பட்ட மொத்த இழப்பீட்டுத் தொகை யாவை என்பதையும்;

(ii) பொலனறுவை ஊடாக திட்டமிடப்பட்டிருந்த வீதியின் நீளம், எதிர்பார்க்கப்பட்ட மொத்த செலவு மற்றும் காணி சுவீகரிப்பின்போது வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட மொத்த இழப்பீட்டுத் தொகை யாவை என்பதையும்;

(iii) மேற்படி அதிவேக நெடுஞ்சாலையின் ஒவ்வொரு கட்டத்துக்காக கடன் பெறப்படும் நிறுவனம், கடன் தொகை மற்றும் வட்டி வீதம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) ஆரம்ப திட்டத்தை மாற்றி இவ் வீதியை பொலனறுவை- திருகோணமலை ஊடாக நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) கருத்திட்டத்தின் பணிகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கும் காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

399/ '15

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) 2009 ஆம் ஆண்டு கௌரவ அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் எண்ணக்கருவின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு தற்போது தங்கள் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற வரையறுக்கப்பட்ட பொலிப்ரோ லங்கா (தனியார்) கம்பனியினால் 2010 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக பொலிதீன் பயன்படுத்தப்பட்டு பெற்றோல் உற்பத்தி செய்யப்பட்டதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) அன்று தொடக்கம் சுமார் ஆறு வருடங்கள் கடந்துள்ள போதிலும் பொலிதீனைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்ற பெற்றோலை சந்தைக்கு விநியோகிக்க முடியாதுள்ளது ஏன் என்பதையும்;

(iii) பொலிதீனைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் பெற்றோலை சந்தைக்கு விநியோகிக்க எதிர்பார்க்கின்ற காலப்பகுதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2016 ஏப்பிறல் 05, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

117/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014.05.01 ஆம் திகதியன்று வெற்றிடமாகிய கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகப் பதவிக்கு உத்தியோகத்தரொருவரை நியமித்த முறையியல் யாதென்பதையும்;

(ii) மேற்படி பதவியை வகிப்பதற்காக பூர்த்தி செய்ய வேண்டிய கல்விசார் மற்றும் அரசாங்க சேவையிலான உரிய அடிப்படை தகைமைகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) 2014.06.02 ஆம் திகதியன்று மேற்படி பதவிக்கு தற்காலிக அடிப்படையில் இணைக்கப்பட்ட இந்திராணி மங்கலிகா விக்கிரமநாயக்க எனும் உத்தியோகத்தரின் கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iv) இவர் 2003.03.03 ஆம் திகதி முதல் 2013.02.11 ஆம் திகதி வரை நிரந்தர அரச சேவையில் எவ்வளவு காலம் கடமையாற்றியுள்ளார் என்பதையும்;

(v) கரையோர பாதுகாப்புப் பணிப்பாளர் நாயகம் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக உத்தியோகத்தரொருவரை நியமிக்க வேண்டியவர் யாரென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி உத்தியோகத்தருக்கு எதிராக நிதி மோசடி சம்பந்தமாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் விசாரணையொன்று மேற்கொள்ளப்படுகின்றதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய உத்தியோகத்தரொருவருக்கு பணிப்பாளர் நாயக பதவியை வழங்குவதற்கான சட்டரீதியான அடிப்படை யாதென்பதையும்;

(iii) மேற்படி பதவியை வலுவற்றதாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எப்போதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன் ?

234/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 2 )

(அ) (i) 2015 சனாதிபதித் தேர்தலை அடிப்படையாகக் கொண்டு 2014 ஆம் ஆண்டின் இறுதியில் சனாதிபதித் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்டதன் பின்னர் அண்ணளவாக ரூபா 6 1/2 கோடி செலவிடப்பட்டு கொழும்பு கெம்பல் மைதானத்தில் நடாத்தப்பட்ட வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் தேசிய மாநாட்டின் ஊடாக பொதுமக்களின் பணம் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி மாநாட்டுக்கு ரூபா 63,723,574/- செலவிடுவதற்கு அங்கீகாரம் வழங்கிய அதிகாரி யாரென்பதையும், இவருக்கு அத்தகைய அங்கீகாரம் வழங்குவதற்கான அதிகாரம் உள்ளதா என்பதையும்;

(iii) மாநாடொன்றுக்காக இவ்வளவு பெருந்தொகைப் பணத்தை செலவிடுகின்ற போது கேள்விப்பத்திரம் கோரும் நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டமை சம்பந்தமாக திணைக்கள மட்டத்தில் ஏதேனும் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி விசாரணையின் முடிவுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டமை சம்பந்தமாக நிதிசார் குற்றப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் புலனாய்வுகளின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(ii) வாழ்வின் எழுச்சி திணைக்களம் இழந்துள்ள ரூபா 06 கோடிக்கு மேற்பட்ட பணத் தொகை சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யாவரென்பதையும்;

(iii) மேற்படி பணத்தை அறவிடுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

305/ '15

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்திற்கு சொந்தமாக டொலர் 18 பில்லியன் பெறுமதியுடைய வெளிநாட்டு சொத்துக்கள் இருப்பதாக வெளிநாட்டு புலனாய்வுத் துறை கண்டறிந்துள்ளதாக வெளிநாட்டு அமைச்சர் 2015 மே மாதம் 07 ஆம் திகதி ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளாரென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி தகவல் பொலிஸ் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி சொத்துக்கள் எவ்வாறு சம்பாதிக்கப்பட்டதென்பதைப் பற்றி மஹிந்த ராஜபக்ஷ அவர்களிடம் அல்லது அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த வேறு அங்கத்தவரொருவரிடம் விசாரணை செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) குறிப்பிட்ட சொத்துக்களை இலங்கைக்கு கொண்டுவருவதற்கு இற்றைவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(v) குறிப்பிட்ட சொத்துக்களை இலங்கைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

348/ '15

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த காலத்தில் பங்குச் சந்தையில் நடைபெற்ற ஊழல் மற்றும் மோசடிகள் தற்போதும் நடைபெறுகின்றதா;

(ii) இன்றேல், இதனூடாகப் பெற்றுக் கொண்ட முன்னேற்றம் யாது;

(iii) நடைபெற்றுள்ள ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பில் விசாரணைகள் நடாத்தப்படுகின்றதா;

(iv) ஆமெனில், இவ் விசாரணைகளின் தற்போதைய நிலைமை யாது;

(v) விசாரணைகளில் குற்றவாளியாகும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கான பொறுப்பை ஏற்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

375/ '15

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005-2015 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் கூட்டத்தில் (General Assembly) கலந்து கொண்ட இலங்கைப் பிரதிநிதிகள் குழுக்களுக்கு,

(i) தலைமை வகித்தவர்கள் யார் என்பதையும்;

(ii) பிரதிநிதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இவர்களிடையே பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்திருப்பார்களாயின், அவர்களுடைய பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) வெளிநாட்டலுவல்கள் அமைச்சு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) செலவிடப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி செலவு விமானப் பயணங்கள், ஹோட்டல் மற்றும் தங்குமிட செலவுகள் என்றவாறு ஒவ்வொரு தலைப்புக்கமைய வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

413/ '16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 ஆகஸ்ட் மாதம் முதல் எஹலியகொட தேர்தல் தொகுதியில் கர்ப்பிணித் தாய்மாருக்கு போசாக்குப் பொதி கிடைப்பதில்லை என்பதையும்;

(ii) இதற்கான காரணங்களை வினவிய போது, அதற்கு நிதி கிடைக்கவில்லை என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவித்துள்ளார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) போசாக்குப் பொதியை வழங்குவதற்கு நிதி வழங்காமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) நிலுவையுடன் மீண்டும் போசாக்குப் பொதிகளை வழங்க தாமதிக்காது நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எத்திகதியிலிருந்து என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

128/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொன்றுதொட்டு இருந்துவருகின்ற உள்நாட்டு நெல்லினங்களை பயிரிடுவதற்காக விவசாய இரசாயனப் பொருட்கள் அவசியமாகாது என்பதையும்;

(ii) உள்நாட்டுப் பண்டைய நெல்லினங்களை பயிரிடுகையில் ஆகக்குறைந்த அளவு நீர் அவசியமாவதோடு பாரம்பரிய வழிமுறைகளைக் கையாள்வதால் சுற்றாடலுக்கும் மனிதனுக்கும் ஏற்படுகின்ற சேதம் குறைவானதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இன்றளவில் இனங்காணப்பட்டுள்ள இலங்கையில் பயன்படுத்தப்பட்ட பண்டைய நெல்லினங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி நெல்லினங்களின் பெயர்கள் யாவை;

(iii) தற்போது பயிரிடப்படுகின்ற பண்டைய நெல்லினங்கள் யாவை;

(iv) ஏனைய பண்டைய நெல்லினங்கள் பயிரிடப்படாமைக்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2014 ஆம் ஆண்டளவில் உள்நாட்டு பண்டைய நெல்லினங்களை விதைநெல்லாகப் பயன்படுத்தி பயிரிடப்படுகின்ற வயல்களின் ஏக்கரளவு யாது;

(ii) இலங்கை பூராவிலும் அத்தகைய விதைநெல்லை பரவச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில் அந்நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

376/ '15

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) CSN அலைவரிசை பதிவு செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி அலைவரிசை பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி யாதென்பதையும்;

(iii) அதன் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iv) 2012 - 2015 ஆண்டு வரை கிரிக்கெற் போட்டிகளின் ஒளி/ஒலி பரப்பு உரிமையை பெற்றுக்கொள்வதற்காக CSN அலைவரிசை செலுத்தியுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) 2005 - 2011 ஆண்டு வரை கிறிக்கெற் போட்டிகளின் ஒளி/ஒலிபரப்பின் மூலமாக இலங்கை ரூபவாஹினீ கூட்டுத்தாபனம் ஈட்டிக்கொண்டுள்ள வருடாந்த வருமானம் தனித்தனியாக யாதென்பதையும்;

(vi) 2011 ஆகஸ்ட் / செத்தெம்பர், அவுஸ்திரேலிய கிரிக்கெற் குழுவின் இலங்கைக்கான சுற்றுப்பயணத்தின்போது கிரிக்கெற் போட்டிகளின் ஒளி/ஒலி பரப்பு உரிமைக்காக இலங்கை ரூபவாஹினீ கூட்டுத்தாபனம் விண்ணப்பிக்காதிருந்தமைக்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

379/ '15

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) கடந்த மூன்று மாதத்தினுள் விஷேட அதிரடிப்படையினரால் தெஹிவளை - கவுடான பிரதேசத்தில் தேடுதல் நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(ii) இக்காலப்பகுதியில் தெஹிவளை-கவுடான பிரதேசத்திலுள்ள ஒரு வீட்டில் தற்கொலைக் குண்டுகளுடன் ஆட்கள் விஷேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டனரா என்பதையும்;

(iii) ஆமெனின், இவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) இவர்களிடமிருந்து வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) தெஹிவளை-கவுடான பிரதேசத்தில் ISIS பயங்கரவாதிகளுடன் தொடர்புடைய ஆட்கள் கைது செய்யப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனின், இவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறு இன்றேல், மேற்கூறப்பட்டவாறு நடந்ததென கூறிவரும் ஆட்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) இலங்கை ISIS பயங்கரவாதிகளின் ஓர் இரையாகுமென அல்லது உறுப்பினர்களை சேர்த்துக்கொள்வதற்கான ஓர் இடமாகுமென புலனாய்வு பிரிவினரால் இனங்காணப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், இதிலிருந்து மீள்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

394/ '15

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 நிதி ஆண்டினுள்,

(i) எதிர்பார்க்கப்பட்ட வரி மற்றும் வரி அல்லாத வருமானம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) உண்மையான வரி மற்றும் வரிகள் அல்லாத வருமானம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) உண்மையான வரி மற்றும் வரி அல்லாத வருமானம் எதிர்பார்க்கப்பட்ட வரி மற்றும் வரி அல்லாத வருமானத்தின் சதவீதமாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டின் வருமானத்துடன் ஒப்பிடுகையில் 2016 இல் எதிர்பார்க்கும் வருமானம் எவ்வளவு தூரம் யதார்த்தமானது என்பதையும்.;

(ii) 2016 செலவுத் தலைப்புக்கள் வருமானத்துடன் சீராக்கும் செய்யப்படும்போது பதிலழிக்கப்படும் செலவுகள் எவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

400/ '16

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவி உடன்படிக்கை மற்றும் அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட 2011 மே மற்றும் 2011 ஒற்றோபர் மீள் இடம்பெறச் செய்தல் திட்டத்திற்கிணங்க, தேசிய நெடுஞ்சாலைகள் துறைசார் கருத்திட்டத்தின் கீழ் ஹிக்கடுவ, பத்தேகம, நில்ஹேன (B158) வீதி மேம்பாட்டுக் கருத்திட்டத்திற்கு செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) ஹிக்கடுவ, கோனபீனுவல மற்றும் பத்தேகம பிரதேச செயலாளர் பிரிவுகளில் தாக்கத்திற்கு உள்ளாகிய ஆட்களின் அதாவது, காணிகள் மற்றும் கட்டடங்களின் உரிமையாளர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி ஆட்களுக்கு இழப்பீடு செலுத்துதல் பற்றி குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து காணி கொள்ளல் மற்றும் மீள் குடியேற்றக் குழுவின் (LARC) குறிப்பீடுகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) இன்றேல், ஏன் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஹிக்கடுவ, கோனபீனுவல மற்றும் பத்தேகம பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள 5 பேரைக்கொண்ட, முறைப்பாடுகள் தொடர்பில் நிவாரணம் வழங்குவதற்கான குழுவின் (GRC) அங்கத்தவர்களின் பெயர்கள் மற்றும் அவர்களது பதவிகள் யாவையென்பதையும்;

(ii) காணி கொள்ளல், இழப்பீடு வழங்குதல், மற்றும் மீள் இடம்பெறச் செய்தல் தொடர்பிலான பிரச்சினைகள், முறைபாடுகள் அல்லது கருத்து வேறுபாடுகளை தீர்த்துக்கொள்வதற்காக தாக்கத்துக்கு உள்ளானவர்களுக்கு மேற்படி குழுவின் முன் செல்ல முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2016 ஏப்பிறல் 06, புதன்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

94/ '15

கௌரவ புத்திக பத்திறண,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் பிரகாரம் உண்ணாட்டு இறைவரித் திணைக்களத்தின் வினைத்திறனின்மை மற்றும் கவனயீனம் காரணமாக அரசாங்கம் ரூபா 388 பில்லியன் பணத்தொகையை இழந்துள்ளதென்பதையும்;

(ii) இத் தொகையில் சேர் பெறுமதி வரித் தொகை மோசடியின் ரூபா 3.9 பில்லியனும் உள்ளடங்குகின்றதென்பதையும்;

(iii) இதற்கமைய, சேர் பெறுமதி வரி மோசடியின் மூலம் அரசாங்கம் இழந்துள்ள பணத்தொகையானது, அரசாங்கம் இழந்துள்ள மொத்தப் பணத் தொகையில் அண்ணளவாக 0.5% மாத்திரமே என்பதையும்;

(iv) மிகுதி 99.5% பற்றி இற்றைவரை விசாரணை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) சேர் பெறுமதி வரித் தொகை மோசடியைத் தவிர மிகுதி ரூபா 384.1 பில்லியனை அரசாங்கம் இழக்கச் செய்தமை தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் தொடர்பில் புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவர்களது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கங்கள் மற்றும் அந்தஸ்துகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஆட்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

297/ '15

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆரம்பக் கல்வியைக் கற்பதற்கான பாடசாலையொன்று இல்லாத காரணத்தினால் அனுராதபுரம் மாவட்டத்தில், இபலோகம பிரதேச செயலாளர் பிரிவில், அளுத் தென்னேவ கிராமத்தில் 200 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் சிறுவர்களுக்கு தூர இடங்களில் அமைந்துள்ள பாடசாலைகளுக்குச் செல்ல நேர்ந்துள்ளது என்பதையும்;

(ii) உரிய வீதிக் கட்டமைப்பு அல்லது பொதுப் போக்குவரத்து சேவை இன்மையால், நாளாந்தம் அண்ணளவாக 10 கி.மீ. தூரம் செல்ல வேண்டியேற்பட்டுள்ளதால் இந்த சிறுவர்கள் எதிர்நோக்கும் சிரமங்களை கவனத்தில் கொண்டு பிரதேச வாசிகள் 1 1/2 ஏக்கர் காணியில் இரண்டு கட்டடங்களை நிர்மாணித்துள்ளனர் என்பதையும்;

(iii) மேற்படி காணியையும் கட்டடத்தையும் அரசாங்கத்திற்குப் பொறுப்பேற்று அதனை அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையாக பிரகடனம் செய்யுமாறு பிரேரிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) வமமா/கெக்கி/அசங்-01/23 ஆம் இலக்கம் அத்தியாயம் II மற்றும் 2011.01.14 ஆம் திகதிய கடிதம் மூலம் கெக்கிராவ வலயக் கல்வி பணிப்பாளரினால் வடமத்திய மாகாண கல்விப் பணிப்பாளருக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) பின்தங்கிய கிராமத்தில் வாழும் இந்த பிள்ளைகளின் நலன் கருதி தென்னேவ கிராமத்தில் அரசாங்க பாடசாலை ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

380/ '15

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— நீர்ப்பாசன மற்றும் நீர் வளமூல முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீர்ப்பாசன அமைச்சினால் ஜிங் கங்கை மற்றும் நில்வளா கங்கை பெருக்கெடுப்பதை நிறுத்துவதற்கான கருத்திட்டமொன்று தயாரிக்கப் பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அத்தகைய கருத்திட்டத்திற்காக சீனாவின் CAMC இன்ஜினியரிங் கம்பனி லிமிடட் எனும் கம்பனியுடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப் பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதன் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(iv) உடன்படிக்கை கைச்சாத்திடாது மேற்படி கம்பனிக்கு 2014.12.31 ஆம் திகதியன்று 2568 ஆம் இலக்க உறுதிச்சீட்டின் மூலம் ரூபா 998,576,311/- மற்றும் 2015.01.31 ஆம் திகதியன்று 99/1 ஆம் இலக்க உறுதிச்சீட்டின் மூலம் ரூபா 1,003,136,336/- மற்றும் 99/2 ஆம் இலக்க உறுதிச்சீட்டின் மூலம் ரூபா 2,009,342,336/- செலுத்தப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அது பற்றிய தகவல்கள் யாதென்பதையும்;

(vi) அவ்வாறு பணம் செலுத்தப்பட்டுள்ளதன் அடிப்படை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்திற்காக 2015 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ரூபா 40 மில்லியன் தொகை மாத்திரம் ஒதுக்கப்பட்டுள்ளபோது இவ்வளவு பணத்தொகையை செலுத்துவது எவ்வாறென்பதையும்;

(ii) இவ்வாறு செலுத்தப்பட்டுள்ள பணத் தொகையை நியாயப்படுத்துவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், ஏனென்பதையும்;

(iv) இன்றேல், இதற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யார் என்பதையும்;

(v) இவர்களுக்கு தண்டனை வழங்குவாரா என்பதையும்;

(vi) அது தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

401/ '16

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) றுகுணு பல்கலைக்கழகத்தில் நீர்வாழ் உயிரினக் கூறினை நிர்மாணிப்பதற்காக காணி சுவீகரிக்கப்படுதல் நடைபெற்றுள்ளதா;

(ii) ஆமெனில், சுவீகரிக்கப்பட்டுள்ள காணியின் அளவு யாது;

(iii) சுவீகரிக்கப்பட்டுள்ள காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி காணி உரிமையாளருக்கு இன்றளவில் இழப்பீட்டுத் தொகையினைச் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) மதிப்பீட்டுப் பெறுமதிக்கிணங்க தெவிநுவர, ரஸ்ஸந்தெணிய, திரு. எஸ். எஸ். குணசேகரவுக்கு இழப்பீட்டுத் தொகை செலுத்துதல் தாமதமடைந்துள்ளது ஏன்;

(iii) குறிப்பிட்ட இழப்பீட்டுத் தொகை செலுத்தப்படும் திகதி யாது;

(iv) இழப்பீட்டுத் தெகையை துரிதமாக செலுத்த நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

105/ '15

கௌரவ புத்திக பத்திரண,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010.01.01 ஆம் திகதி தொடக்கம் 2014.12.31 ஆம் திகதி வரையிலான ஐந்தாண்டு காலப் பகுதியில் ஐரோப்பியக் கண்டத்திலுள்ள நாடுகளில் மரணித்த இலங்கைப் பிரசைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு நாட்டின்படி தனித்தனியாக எத்தனையென்பதையும்,

(ii) இவர்களது பெயர், வயது, இலங்கையில் வசித்த முகவரி மற்றும் மேற்படி நாடுகளில் புரிந்த தொழில் யாவையென்பதையும்,

(iii) இந்த ஆட்களின் மரணங்களுக்கான அண்மித்த காரணங்கள் யாவையென்பதையும்,

(iv) இவர்கள் சார்பாக அரசாங்கம் வழங்கியுள்ள நிவாரணங்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010.01.01 ஆம் திகதி தொடக்கம் 2014.12.31 ஆம் திகதி வரையிலான ஐந்தாண்டு காலப் பகுதியில் ஐரோப்பியக் கண்டத்திலுள்ள நாடுகளில் முழுமையாக அல்லது பகுதியளவில் அங்கவீன நிலைமைக்கு உள்ளாகிய இலங்கைப் பிரசைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு நாட்டின் பிரகாரம் தனித்தனியாக எத்தனையென்பதையும்,

(ii) இவர்களது பெயர், வயது, இலங்கையில் வசித்த முகவரி மற்றும் மேற்படி நாடுகளில் மேற்கொண்ட தொழில் யாவையென்பதையும்,

(iii) இவர்கள் அங்கவீனமடைந்ததற்கான காரணங்கள் யாவையென்பதையும்,

(iv) இவர்கள் சார்பாக அரசாங்கம் வழங்கியுள்ள நிவாரணங்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

403/ '16

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— சுகாதாரம் போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை, கம்புறுகமுவ தாதிமார் கல்லூரியில் பௌதிக மற்றும் மனித வளங்கள் பற்றாக்குறை நிலவுகின்றதென்பதையும் ;

(ii) இதன் காரணத்தினால் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும் மாணவ தாதிமார்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்பதையும் ;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கம்புறுகமுவ தாதிமார் கல்லூரியில் மதியுரை சேவைகளை வழங்கும் ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனை ;

(ii) இந்த ஆலோசகர்களின் எண்ணிக்கை போதுமானதா;

(iii) தேவைப்படும் ஆலோசகர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்காதிருப்பது ஏன்;

(iv) நடைமுறைக் கல்வி நடவடிக்கைள் போதிய அளவு நடைபெறுகின்றதா ;

(v) இன்றேல், ஏன்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மண்டப வசதிகள் மற்றும் தங்குமிட வசதிகளை மாணவ தாதிமார்களுக்கு துரிதமாக வழங்க மாற்று வேலைத்திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டுள்ளதா;

(ii) தற்போது பயிற்சி பெறும் மாணவ தாதிமார்களை காலி அல்லது கொழும்பு தாதிமார் கல்லூரிக்கு இணைத்து விட்டு கம்புறுகமுவ தாதிமார் கல்லூரியை நவீனமயப்படுத்த முன்மொழிதல் தொடர்பில் அவரின் கருத்து யாது;

(iii) இன்றேல், மாணவ தாதிமார்களுக்கு கற்கை நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஈ) இன்றேல், ஏன்?

409/ '15

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை பிரதேசத்தில் மீனவர் சங்கமொன்றின் சார்பாக லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியினால் பெண் அரசியல்வாதியொருவருக்கு ரூபா 750 இலட்சம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இவருடைய பெயர் யாதென்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி கடன் தொகையை வழங்குவதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ளவை யாவை என்பதையும்;

(iv) மேற்படி கடன் தொகையில் தற்போது மீள அறவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(v) இன்றேல், தொடர்ச்சியாக கடன் செலுத்துதல் தவறவிடப்பட்டுள்ளமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) அது தொடர்பான முழுமையான விபரங்களை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vii) லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்படும் கடன்களுக்கு பன்சாலைகளின் உறுதிகள், குத்தகை முறையில் அரசாங்கத்திலிருந்து பெறப்பட்ட காணிகள் அல்லது படிகக் கற்களை பிணையாக வைக்க முடியுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?